## கொடைக்கானல் நகராட்சி

2018ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ம் நாள் (10.09.2018) திங்கள் கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

முன்னிலை: ரா.முருகேசன், எம்.ஏ., எம்.பில்., பி.எல்., டி.பி.எம்.,
தனி அலுவலர்.

1) 1920–ஆம் ஆண்டைய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், அட்டவணை–4ல் வகுத்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, 19.07.2018–ம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை (நிலை) எண்.73 மற்றும் 26.07.2018ம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.76ல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளவும், கீழ்கண்டவாறு சொத்துவரியினை திருத்தியமைக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

| வ. எண் | கட்டிட விபரம் | திருத்தி அமைக்கப்படவுள்ள சொத்துவரி விகிதம் |
|---|---|---|
| 1. | குடியிருப்பு கட்டிடங்கள் (Residential Buildings) | 50% க்கு மிகாமல் |
| 2. | குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் (Non Residential Buildings) | 100% க்கு மிகாமல் |

மேற்சொன்ன அரசாணைகளுக்கிணங்க, சென்னை நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களின் 20.08.2018ம் நாளிட்ட செயல்முறைகளின் பொது சொத்துவரி சீராய்வு குறித்து விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

மேலே பத்தி 1.ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகள் மற்றும் 20.08.2018ம் நாளிட்ட நகராட்சி நிர்வாக ஆணையாளரின் வழிகாட்டி நெறிமுறைகளுக்குட்பட்டு, கொடைக்கானல் நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளின் கடந்த 10 ஆண்டுகால வளர்ச்சியினை கருத்தில் கொண்டும், எதிர்கால நகர வளர்ச்சியையும் மேற்க்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சி பணிகளையும் கருத்தில் கொண்டு சொத்துவரி விதிப்பிற்கான மண்டலங்களுக்கான அடிப்படை மதிப்பினை (Basic Value) கீழ்கண்டவாறு திருத்தியமைக்க வேண்டியுள்ளது.

| மண்டலம் | 01.04.1998 முதல் நடைமுறையில் உள்ள தற்போதைய மதிப்பு | 01.04.2018 முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ள உயர்த்தப்படவுள்ள மதிப்பு |
|---|---|---|
| ஆ (A) | ரூ.2.50 | ரூ.3.75 |
| ஆ (B) | ரூ.2.00 | ரூ.3.00 |
| இ (C) | ரூ.1.50 | ரூ.2.25 |
| ஈ (D) | ரூ.0.50 | நீக்கம் செய்யப்பட்டுள்ளது. |

மேற்சொன்ன அடிப்படை மதிப்பின் அடிப்படையில், கொடைக்கானல் நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளில் உள்ள சொத்துக்களின் உரிமையாளர்கள் / குடியிருப்போர் / குத்தகைதாரர்கள், தங்களது சொத்துக்கள் குறித்த விபரங்கள் அடங்கிய சுய மதிப்பீட்டு படிவத்தை நகராட்சி அலுவலகத்தில் பெற்று, பூர்த்தி செய்த சுய மதிப்பீட்டு படிவத்தினை 10.10.2018க்குள் நகராட்சியில் தாக்கல் செய்யப்பட வேண்டுமென அறிவிக்கை வெளியிடலாம்.

மேலும், குறிப்பிட்ட தேதிக்குள் சொத்துவரி சுய மதிப்பீட்டு படிவங்களை தாக்கல் செய்யாத உரிமையாளர்கள் / குடியிருப்போர் / குத்தகைதாரர்களின் சொத்துக்கள் நகராட்சி ஆணையாளர் / தனி அலுவலர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதனடிப்படையில் சொத்துவரி சீராய்வு செய்து சொத்துவரி நிர்ணயம் செய்யப்படும் எனவும் நாளிதழில் அறிவிக்கை வெளியிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அரசாணை மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உள்பட்டு 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்வு பணி மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **453, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர், திரு.ரா.முருகேசன் அவர்களின் ஜுலை–2018ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.632/2018/சி1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **454, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **பதிவு செய்யப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர், திரு.ரா.முருகேசன் அவர்களின் ஆகஸ்ட்–2018ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.632/2018/சி1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **455, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **பதிவு செய்யப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சி 31.05.1994 –ல் இருந்து சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 21.45 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்நகராட்சியில் மொத்தம் 24 வார்டுகள் அமைந்துள்ளன. 2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 36501 ஆகும். மலைகளின் இளவரசி என அழைக்கப்படும் கொடைக்கானல் நகரம், இந்தியாவின் முக்கிய கோடை வாசஸ்தலமாகும். இந்நகரில் இந்தியாவின் பல்வேறு மாநிலஙகளிலும், வெளி நாட்டிலிருந்தும் தினசரி பல்லாயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்த வண்ணம் உள்ளனர். சாதாரண நாட்களில் தினசரி சுற்றுலா பயணிகள் சுமார் 4000 முதல் 5000 வரை இந்நகருக்கு வந்து தஙகி செல்கின்றனர்.

இந்நகருக்கு வரும் சுற்றுலா பயணிகள் தனியாருக்கு சொந்தமான தஙகும் விடுதிகளில் தஙக வேண்டிய சூழ்நிலை உள்ளது. இந்நகரில் குறைந்த அளவே தஙகும் விடுதிகள் அமைந்துள்ளன. கோடை காலஙகளில் தஙகும் விடுதிகளின் கட்டணஙகள் இரண்டு மடஙகாக உயர்த்தி தனியார் விடுதிகளில் கட்டணம் வசூல் செய்யப்படும் நிலையில் உள்ளது. இந்நகருக்கு வருகை புரியும் சாதாரண மற்றும் நடுத்தர சுற்றுலா பயணிகள் அதிகளவில் தனியார் விடுதிகளில் கட்டணஙகள் செலுத்தி தஙக இயலாத சூழ்நிலை உள்ளது. சுதாரண மற்றும் நடுத்தர சுற்றுலா பயணிகள் பயன்படுத்தும் வகையில் குறைந்த கட்டணத்தில் தஙகும் விடுதிகள் இல்லாத காரணத்தினால் சுற்றுலா பயணிகள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

எனவே, சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வகையில் கொடைக்கானல் நகராட்சியினால் குறைந்த வாடகைக் கட்டணத்தில் விடுதி / தஙகுமிடம் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க உத்தேச செலவினமாக சுமார் ரூ.6.50 கோடிகள் தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்செலவினத்தினை மேற்கொள்ள நகராட்சியின் நிதி ஆதாரஙகள் திருப்திகரமாக இல்லாததின் காரணமாக Design Built Finance Operate and Tranfer என்ற அடிப்படையில் தனியாரிடமிருந்து நிதியுதவிகள் பெற்று தங்குமிட வசதிகள் ஏற்படுத்தலாம்.

இதற்கான இந்நகராட்சியின் வார்டு –பி, பிளாக் –5, நகரளவு எண்.25 ல் இந்நகராட்சிக்கு சொந்தமான 14150 ச.மீட்டர் பரப்பளவு கொண்ட இடம் உள்ளது. இவ்விடத்தில் இந்நகருக்கு வரும் சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வகையில் Design Built Finance Operate and Tranfer என்ற அடிப்படையில் (DBFOT Mode) அமைப்பதற்கு வெளி சந்தையில் ஒப்பந்தப்புள்ளி கோரவும், பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய தொழில் நுட்ப கூர்ந்தாய்வு குழு அமைக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி பெற்று மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **456, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் கீழ்க்குண்டாறு குடிநீர் பணிகளுக்கு குழாய் பதித்திட பெரும்பாலான சாலைகள் தோண்டப்பட்டு அவைகள் சரி செய்யப்படாமல் போக்குவரத்திற்கு லாயக்கற்ற நிலையில் பழுதடைந்துள்ளது. இச்சாலைகளை சீரமைப்பதற்கு கீழ்க்கண்டவாறு பணிகள் தேர்வு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதனடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.2634/2018/ஊ.வ.8, நாள்.13.8.2018ல் ரூ.100.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | முதலியார்புரம் 1 மற்றும் 2வது தெரு, ஆனந்தகிரி 2 மற்றும் 3வது தெருவில் தார்ச்சாலை பேட்ஜ் ஒர்க் செய்தல். | 26.00 |
| 2. | முதலியார்புரம் 3 மற்றும் 4–வது தெரு ஆனந்தகிரி 1 மற்றும் 2–வது தெருவில் சிமிண்ட் சாலை பேட்ஜ் ஒர்க் செய்தல். | 33.75 |
| 3. | செயின்ட் மேரிஸ் சாலை, அண்ணாசாலை மற்றும் காமராசர் சாலையில் தார்ச்சாலை மற்றும் சிமிண்ட் பேட்ஜ் ஒர்க் செய்தல். | 29.00 |
| 4. | நாயுடுபுரம் பிள்ளையார் கோவில் முதல் நகராட்சி எல்லை வரை தார்ச்சாலை அமைத்தல். | 11.25 |
| | மொத்தம் | 100.00 |

திண்டுக்கல், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2634/2018/ஊ.வ.8, நாள்.13.08.2018 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பதிவு செய்யலாம். (கோப்பு ந.க.எண்.1259/2018/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **457, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **பதிவு செய்யப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான நகர்நல அலுவலர் குடியிருப்பில் ரூ. 2.40 இலட்சம் மதிப்பீட்டில் மராமத்து செய்வதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண். 307 நாள். 9.2.2018 ல் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு 29.6.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சியின் நகர் நல அலுவலரின் குடியிருப்பினை மராமத்து செய்தல் | 2.40 | 1. திரு ஜான் பீட்டர்<br>2. திரு எம். அந்தோணிசாமி | 0.46 % குறைவு<br>1.71% அதிகம் |

அலுவலக குறிப்பு. மேற்சொன்ன பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளில் மதிப்பீடு விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **458, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சி அலுவலகத்தில் உள்ள 30 KVA ஜெனரேட்டருக்கு ஆயில் சர்வீஸ் மேற்கொள்வதற்கு ரூ.25,000/– (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)க்கு பொது நிதியின் கீழ் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி ஒப்பந்தப்புள்ளி கோரவும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **459, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதியளிக்கப்படுகிறது.** |

*******

8) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பேருநது நிலை கழிப்பறையினை ரூ. 2.10 இலட்சம் மதிப்பீட்டில் மராமத்து செய்வதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண். 430 நாள். 16.7.2018 ல் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியை மேற்கொள்வதற்கு 10.8.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத் தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள பொது கழிப்பறையினை மராமத்து செய்தல் | 2.10 | 1. திரு பி. ராகவானந்தம்<br>2. வி.ஏ. அப்துல் உறமீது | 0.16 % குறைவு<br>1.10% அதிகம் |

அலுவலக குறிப்பு. மேற்சொன்ன பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளில் மதிப்பீடு விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **460, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) கொடைக்கானல் நகராட்சி ஆணையர் அவர்களின் குடியிருப்பினை புதுப்பித்து மராமத்து பணிகள் செய்வதற்கு 10.8.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | நகராட்சி ஆணையாளர் குடியிருப்பினை புதுப்பித்து மராமத்து பணிகள் செய்தல் | 9.50 | திரு.எம்.ஆர். பிலால் இப்ராஉறிம் | மதிப்பீட்டினை விட 0.03 சதவிகிதம் குறைவு |

அலுவலக குறிப்பு. மேற்சொன்ன பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டது. இதில் மதிப்பீட்டினை விட 0.03 விழுக்காடு குறைவாக ஒப்பந்ததாரர் திரு எம்.ஆர். பிலால் இப்ராஉறிம் என்பவர் கொடுத்துள்ளார். பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டினை விட குறைவாக கொடுத்துள்ள திரு எம்.ஆர். பிலால் இப்ராஉறிம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 461, நாள். 10.09.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

10) கொடைக்கானல் நகராட்சிக்கு அலுவலகத்தில் பராமரிப்பு பணிகள் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மராமத்து செய்வதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண். 417 நாள். 28.6.2018 ல் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு 10.8.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சி அலுவலகத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 10.00 | திரு.பி. அரசகுமார் | மதிப்பீட்டினை விட 0.22 சதவிகிதம் குறைவு |

அலுவலக குறிப்பு. மேற்சொன்ன பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டது. இதில் மதிப்பீட்டினை விட 0.22 விழுக்காடு குறைவாக ஒப்பந்ததாரர் திரு பி. அரசகுமார் என்பவர் கொடுத்துள்ளார். பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டினை விட குறைவாக கொடுத்துள்ள திரு பி. அரசகுமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 462, நாள். 10.09.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

11) கொடைக்கானல் நகராட்சிக்கு கோக்கர்ஸ் வாக் பகுதியில் நடைபெறும் குறிஞ்சி விழாவினை முன்னிட்டு குறிஞ்சி மலர்களை பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் கண்டு களிக்கும் வகையில் இரும்பு படிக்கட்டுகள் மற்றும் கைப்பிடிகள் அமைப்பதற்கு 10,8,2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் கோக்கர்ஸ்வாக் பகுதியில் குறிஞ்சி மலரை கண்டு களிக்கும் வகையில் இரும்பு படிக்கட்டுகள் மற்றும் கைப்பிடிகள் அமைத்தல் | 10.00 | திருமதி.என். சரஸ்வதி | மதிப்பீட்டினை விட 0.32 சதவிகிதம் குறைவு |

அலுவலக குறிப்பு. மேற்சொன்ன பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டது. இதில் மதிப்பீட்டினை விட 0.32 விழுக்காடு குறைவாக ஒப்பந்ததாரர் திருமதி என்.சரஸ்வதி கொடுத்துள்ளார். பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டினை விட குறைவாக கொடுத்துள்ள திருமதி என். சரஸ்வதி என்பவரின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **463, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

12) நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம், குன்னூர் அவர்களின் கடிதம் எண்.2796/2018/S4, நாள்.10.04.2018ல் மேற்கண்ட நிறுவனத்தின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்திட கொடைக்கானல் நகராட்சிக்குட்பட்ட இடத்தில் 8 x 8 என்ற அளவில் இடம் ஒதுக்கீடு செய்து தரக் கோரப்பட்டுள்ளது. எனவே, இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1325/2018/A3, நாள்.28.06.2018ன் மூலம் கே.ஆர்.ஆர்.கலையரங்கம் அருகில் 8' x 8' = 64 சதுர அடி காலி இடத்திற்கு ரூ.1800/– மாத வாடகை நிர்ணயம் செய்து மேற்கண்டவாறு மாத வாடகை செலுத்தவும் வைப்புத் தொகையாக 12 மாத வாடகை தொகையான ரூ.21,600/– (1,800 x 12 = 21,600) செலுத்த சம்மத கடிதம் அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டது. அதன்படி, மேற்காணும் தமிழ்நாடு தேயிலை தோட்டக்கழக நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.வி4/2736/2018, நாள்.06.07.2018ன் மூலம் மேற்காணும் தொகைகளை செலுத்த இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட நிறுவனத்தின் 24.08.2018ம் தேதிய கடிதம் மூலம் 12 மாத வாடகை தொகையான ரூ.21,600/–ஐ வைப்புத் தொகையாக வங்கி வரைவோலை மூலம் இவ்வலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, கே.ஆர்.ஆர்.கலையரங்கம் அருகில் 8' x 8' அளவில் தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழக உற்பத்தி பொருட்களை விற்பனை செய்து கொள்ள மாதம் வாடகை அடிப்படையில் இடம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1325/2018/A3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **464, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

13) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் அனுமதியற்ற கட்டிடங்கள் மற்றும் விதிமீறிய கட்டிடங்கள் மீது தொடரப்பட்ட வழக்கு சம்பந்தமாக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையின் நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.T.S.முகமது முகைதீன் அவர்களை 30.08.2018 அன்று நேரில் சென்று விபரம் பெறப்பட்டது. இதில் 94 வழக்குகளுக்கு எதிர்வாதுரை தாக்கல் செய்யப்படாமல் உள்ளது. மேற்கண்ட 94 வழக்குகளுக்கு எதிர்வாதுரை தாக்கல் செய்ய (Common Counter) ஒரு வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.7,500/– மும் 94 வழக்கிற்கு நீதிமன்ற செலவினம் ரூ.2500/– வீதம் 235000/– ஆக மொத்தம் ரூ.2,42,500/– (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.T.S.முகமது முகைதீன் அவர்களுக்கு வழங்கக் கோரியுள்ளார். மேற்கண்ட விபரப்படி ரூ.2,42,500/–ஐ அன்னாருக்கு பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **465, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

14) இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.443, நாள்.27.07.2018ன்படி, பொது சுகாதாரப் பிரிவு உரக்கிடங்கிற்கு ஈ ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள 2018–2019ம் ஆண்டிற்கு ரெடிமிக்ஸ் ஈ மருந்து கொள்முதல் செய்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவிற்கும் மன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பின்படி ரெடிமிக்ஸ் ஈ மருந்து கொள்முதல் செய்வதற்கு 31.08.2018ம் நாளில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விபரத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வரிசை எண் | விநியோகிக்க வேண்டிய பொருளின் விபரம் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | விலை விகிதம் ரூபாய் (லிட்டர் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1. | ரெடிமிக்ஸ் | ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ், 1/102, சேலம் மெயின் ரோடு, செல்லம்பட்டி போஸ்ட், நாமக்கல் தாலுகா, நாமக்கல் மாவட்டம். | ரூ.659/– |
| 2. | ரெடிமிக்ஸ் | ஸ்ரீ பிளாஸ்டோ டெக், எண்.31/1, 6வது மெயின்ரோடு, திருமுடிவாக்கம், சென்னை–600 044. | ரூ.660/– |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ், 1/102, சேலம் மெயின் ரோடு, செல்லம்பட்டி போஸ்ட், நாமக்கல் தாலுகா, நாமக்கல் மாவட்டம் என்பவரின் விலை விகிதத்தினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – ரெடிமிக்ஸ் மருந்து விநியோகிக்க வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ், 1/102, சேலம் மெயின் ரோடு, செல்லம்பட்டி போஸ்ட், நாமக்கல் தாலுகா, நாமக்கல் மாவட்டம் என்பவரின் விலை ரூ.659/–ஐ ஏற்று விநியோக உத்தரவு வழங்கவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2614/2015/எச்.1).

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **466, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

15) இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.445, நாள்.21.08.2018ன்படி, இந்நகராட்சி பகுதிக்குள் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு நிலவேம்பு பவுடர் தொடர்ந்து ஐந்து நாட்கள் வீதம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வழங்க கொள்முதல் செய்வதற்கும், அதற்காகும் உத்தேச செலவிற்கும் மன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அனுமதியின்படி, நிலவேம்பு பவுடர் கொள்முதல் செய்வதற்கு 31.8.2018ம் நாளில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விபரத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வரிசை எண் | விநியோகிக்க வேண்டிய பொருளின் விபரம் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | விலை விகிதம் ரூபாய் (கிலோ ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1. | நிலவேம்பு பவுடர் | ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் எக்ஸ்போர்டர் அன்டு டிஸ்டிபூட்டர், திருமால் இல்லம், பெரிய பஜார், அய்யம்பாளையம், திண்டுக்கல். | ரூ.1900/– |
| 2. | நிலவேம்பு பவுடர் | ஸ்ரீ விநாயகா பார்மா, 33 வெங்கட்ராமன் தெரு, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம். | ரூ.2200/– |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் எக்ஸ்போர்டர் அன்டு டிஸ்டிபூட்டர் என்பவரின் விலை விகிதத்தினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – நிலவேம்பு பவுடர் விநியோகிக்க வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் எக்ஸ்போர்டர் அன்டு டிஸ்டிபூட்டர் என்பவரின் விலை ரூ.1900/–ஐ ஏற்று விநியோக உத்தரவு வழங்கவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7216/2015/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **467, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

16) கொடைக்கானல் நகராட்சியின் பொலிரோ வாகனம் TN 57 AS 0817 வாகனத்தின் சர்வீஸ் பணிகள் மதுரை TVS பணிமனையில் மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மானம் எண். 440 நாள். 27.07.2018 ரூ.10,000/– க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. இவ்வாகனம் மதுரை TVS பணிமனையில் சர்வீஸ் மேற்கொள்ளப்பட்டவகையில் பணிமனையின் பட்டியல் ( பட்டியல் எண். R019M004081 நாள் 30.8.2018) ரூ. 12612/– க்கு பெறப்பட்டுள்ளது. எனவே, கூடுதல் தொகை ரூ. 2612/– ( ரூபாய் இரண்டாயிரத்து ஆறு நூற்று பனிரெண்டு மட்டும் ) மதுரை TVS பணிமனைக்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம். ( கோப்பு ந.க.எண். 333/2013/இ1)

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 468, நாள். 10.09.2018. |
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

17) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கே.ஆர்.ஆர். கலையரஙகத்தின் வாகன நிறுத்தப் பகுதியின் பின்புற சாலையான புரூட்டன் காம்பவுண்ட் சாலையானது மிகவும் சேதமடைந்து வாகனஙகள் செல்ல இயலாமல் உள்ளது. இச்சாலையிலேயே இந்நகராட்சி வாகன நிறுத்தத்திற்கான பெரும்பாலான சுற்றுலா வாகனஙகள் வந்து செல்கின்றன. அதிகப்படியான சுற்றுலா வாகனஙகள் பயன்படுத்தும் இச்சாலையினை புதுப்பிக்க வேண்டியது இன்றியமையாததும், முக்கியமானதாகும். எனவே, இச்சாலையில் தார்ச்சாலை அமைத்திட மதிப்பீடு ரூ. 11.00 இலட்சத்திற்கு ( ரூபாய் பதினோறு இலட்சம் மட்டும் ) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும், இச்செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 469, நாள். 10.09.2018. |
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

18) கொடைக்கானல் நகராட்சி நகரமைப்பு பிரிவில் இயஙகி வரும் ஈப்பு வாகனம் எண்.TN 57 AY 5392 வாகனம் 150000 கிலோ மீட்டர் ஓடிவிட்டதால் கீழ்கண்ட பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளது.

1. ஆயில் சர்வீஸ் ஆல்.
2. கிளட்ச் பிளேட் பூஸ்டர் மேல் மற்றும் கீழ்.
3. சஸ்பன்ஸ் புஸ்கிட் முன் மற்றும் பின்.
4. ஜாயின்ட் ஸ்டார் மாற்றம்.
5. ஆல் லயிட் செக்கப்.
6. கதவு பீடிங் ரப்பர் வலது புறம் பின் கதவு.
7. வைப்பர் பிளைடு.
8. பேன் பெல்ட் மூன்றும் புதியது மாற்றம்.
9. வீல் அலாய்மென்ட், வீல் பேலன்ஸ்.
10. பிரேக் லைனிங் முன் மற்றும் பின்
11. ரேடியேட்டர் சர்வீஸ் மற்றும் கூல் அன்டு ஆயில் மாற்றம்.
12. ஏ.சி.கம்பரசர் பொருத்துதல்.

மேற்கண்ட பழுதுகளை மதுரை டி.வி.எஸ் பணிமனையில் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.60,000/– பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **470, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

19) பொது சுகாதார நலன் கருதி சுகாதாரப் பிரிவு குப்பை அகற்றும் வாகனம் TN 57 9226ல் ஏற்பட்ட பழுது பணிகள் நீக்க, நகரில் குப்பைகள் தேங்குவதால் அவசர அவசியம் கருதி மதுரை TVS நிறுவனத்திடம் பழுது பணிகள் நீக்க விலைப்புள்ளி கோரப்பட்டதில், வாகனத்தின் பழுது பணிகள் நீக்க ரூ.32,755/—க்கு பட்டியல் கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட செலவுத் தொகை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், TVS பணிமனை மதுரைக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2616/2018/எச்.1)

*******

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **471, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

20) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.221/அ1, நாள்.06.07.2018ன்படி, வரப்பெற்றுள்ள 2016—17ம் ஆண்டு வருவாய் மற்றும் மூலதன நிதி தணிக்கை அறிக்கை பத்தி எண்.61ல் குறிப்பிட்டுள்ளபடி, அரசாணை எண்.62, உள்ளாட்சி துறை, நாள்.12.01.1994ன்படி 2016—17ம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் வழங்கல் நிதி மற்றும் கல்வி நிதிக்கான தணிக்கை கட்டணம் ரூ.1,91,642/— (ரூபாய் ஒரு இலட்சத்து தொன்னூற்று ஒராயிரத்து அறநூற்று நாற்பத்து இரண்டு மட்டும்) அரசு தலைப்பில் செலுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்படி விபரத்திற்கு 2016—17ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.1,91,642/—ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.580/2006/C2)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **472, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

21) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான புனித சலேத் அன்னை திருத்தலத்திலிருந்து காமராசர் சாலை வரை தார் பேட்ஜ் வேலை செய்வதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண். 438 நாள். 27.7.2018 ல் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியை மேற்கொள்வதற்கு 10.8.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | புனித சலேத் அன்னை திருத்தலத்திலிருந்து காமராசா் சாலை வரை தாா் பேட்ஜ் செய்தல் | 29.00 | திரு பி. அரசகுமாா் | மதிப்பீட்டினை விட 0.16 விழுக்காடு குறைவு |

அலுவலக குறிப்பு. 1) மேற்சொன்ன பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாராின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி இப்பணியினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும், இச்செலவினத்தினை சுஙக நிதியில் மீளப் பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **473, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

22) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு பயன்பாட்டில் உள்ள TN 57 W 9634, TN 57 AU 3862 ஆகிய இரண்டு வாகனங்கள் பழுதின் காரணமாகவும், தகுதிச் சான்று பெறுவதற்காகவும், பழுது நீக்க பணிக்காகவும் மேல் நடவடிக்கையில் உள்ளது. மேலும் TN 57 BZ 9224 வாகனம் பழுதின் காரணமாக பழுது நீக்குவதற்கு மதுரை பணிமனையில் உள்ளது. குப்பைகளை அப்புறப்படுத்தும் வாகனங்கள் ஒரே நேரத்தில் மூன்று வாகனங்கள் இயக்கமில்லாத சூழ்நிலையில் குப்பைகள் தேங்கி சுகாதாரக் கேடு ஏற்படுவதால், பொது மக்களிடம் இருந்து புகார்கள் வந்தவண்ணமாக உள்ளதாலும், பொது மக்களின் நலன் கருதியும் நகரின் தூய்மை நலன் கருதியும், சுமார் ஒரு மாத காலமாக நகரில் தேங்கிக் கிடக்கும் குப்பைகளை உடனடியாக அகற்றி உரக்கிடங்கில் சேர்க்க வேண்டியுள்ளது. எனவே, குப்பைகளை அப்புறப்படுத்த ஒரு பொலிரோ பிக்கப் மற்றும் ஒரு டிராக்டர் வாகனங்களை டீசல் உட்பட வாடகைக்கு அமர்த்தி குப்பை அகற்றும் பணிகள் மேற்கொள்ளலாம். இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1,50,000/—ஐ (ஒரு இலட்சத்தி ஐம்பது) நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி திறந்த ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது மக்களின் சுாதாரம் காக்க வேண்டியதால் அவசர அவசியம் கருதி குறுகிய காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் இதற்காகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2870/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **474, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

23) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் இருதயபுரம் சாலையில் தார்ச்சாலை அமைப்பதற்கு 2014—2015 ல் ரூ. 4.75 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்றத் தீர்மானம் எண். 1286 நாள். 18.2.2015 ல் வரிசை எண். 24 —ல் கண்ட பணிக்கு மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்வதற்கு 20.5.2015 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்றத் தீர்மானம் எண். 1340 நாள். 28.5.2015 ல் மன்றம் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு எம்.ஆர். பிலால் இப்ராஉறிம் என்பவருக்கு இப்பணியினை மேற்கொள்ள தெரிவித்து 11.11.2015 ல் பணி உத்திரவு வழஙகப்பட்டுள்ளது. இந்நிலையில் செண்பகனூர் முதல் குருசடி வரை உள்ள சாலையானது மிகவும் சேதமடைந்து உள்ளதால் இச்சாலையில் வாகனங்கள் செல்ல இயலாமல் பழுதடைந்து விடுகின்றன. மேலும் இச்சாலையிலேயே இந்நகராட்சியின் குப்பை வாகனங்களும் சென்று வர வேண்டியுள்ளது. எனவே, நகர்மன்றத் தீர்மானம் எண். 1286 நாள். 18.2.2015 மற்றும் 1340 நாள். 28.5.2015 ல் தேர்வு செய்யப்பட்ட இருதயபுரம் பகுதியில் தார்ச்சாலை அமைத்தல் என்பதற்கு பதிலாக செண்பகனூர் முதல் குருசரடி

வரை தார்ச்சாலை அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் நகர்மன்றத் தீர்மானம் எண். 1340 நாள். 28.5.2015 ல் ஒப்புதல் செய்யப்பட்ட குறைந்த விலை விபரத்திற்கும், அதே ஒப்பந்ததாரர் திரு எம்.ஆர். பிலால் இப்ராகிம் என்பவர் மூலம் இப்பணியினை செய்து முடித்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **475, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

24) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் இருதயபுரம் சாலையில் தார்ச்சாலை அமைப்பதற்கு 2015–2016 ல் ரூ. 4.98 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்றத் தீர்மானம் எண்.1343, நாள்.28.05.2015ல் வரிசை எண். 3 –ல் கண்ட பணிக்கு மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்வதற்கு 12.2.2016 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்றத் தீர்மானம் எண். 1540 நாள். 25.2.2016 ல் மன்றம் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு பி. அரசகுமார் என்பவருக்கு இப்பணியினை மேற்கொள்ள தெரிவித்து 26.2.2016 ல் பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் செண்பகனூர் குருசடி முதல் விநாயகர் கோயில் வரை உள்ள சாலையானது மிகவும் சேதமடைந்து உள்ளதால் இச்சாலையில் வாகனங்கள் செல்ல இயலாமல் பழுதடைந்து விடுகின்றன. மேலும் இச்சாலையிலேயே இந்நகராட்சியின் குப்பை வாகனங்களும் சென்று வர வேண்டியுள்ளது. எனவே, நகர்மன்றத் தீர்மானம் எண்.1343, நாள்.28.05.2015 மற்றும் 1540 நாள். 25.2.2016 ல் தேர்வு செய்யப்பட்ட இருதயபுரம் பகுதியில் தார்ச்சாலை அமைத்தல் என்பதற்கு பதிலாக செண்பகனூர் குருசரடி முதல் விநாயகர் கோவில் வரை தார்ச்சாலை அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் நகர்மன்றத் தீர்மானம் எண். 1540 நாள். 25.2.2016 ல் ஒப்புதல் செய்யப்பட்ட குறைந்த விலை விபரத்திற்கும், அதே ஒப்பந்ததாரர் திரு பி. அரசகுமார் என்பவர் மூலம் இப்பணியினை செய்து முடித்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **476, நாள். 10.09.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

25) கொடைக்கானல் நகராட்சி 31.05.1994 –ல் இருந்து சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 21.45 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்நகராட்சியில் மொத்தம் 24 வார்டுகள் அமைந்துள்ளன. 2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 36501 ஆகும். மலைகளின் இளவரசி என அழைக்கப்படும் கொடைக்கானல் நகரம், இந்தியாவின் முக்கிய கோடை வாசஸ்தலமாகும். இந்நகரில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும், வெளி நாட்டிலிருந்தும் தினசரி நூற்றுக்கு மேற்பட்ட சுற்றுலா வாகனங்கள் வந்து செல்கின்றன. மேலும் ஏப்ரல், மே , ஜீன் மாதஙகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா வாகனங்கள் இந்நகருக்கு வந்து செல்கின்றன. எனவே, இந்நகராட்சி எல்லையில் உள்ள சுஙக சாவடியினை நவீனமயமாக்கிடவும், கணணிமயமாக்கிடவும் கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | சுங்க சாவடியில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் | 8.10 |
| 2 | சுங்க சாவடியில் பூம் பேரியர், சி.சி.டி.வி பொருத்துதல் மற்றும் கணணி மையமாக்குதல் | 24.00 |

மேற்கண்ட பணிகளை சுஙக நிதியின் மூலம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்திட கோரி மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களுக்கு பிரேரணை அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 477, நாள். 10.09.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

26) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான இருதயபுரம் பகுதியில் குடிநீர் குழாய் அமைப்பதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண். 416 நாள். 28.6.2018 ல் ஒப்புதல் வழஙகப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு 07.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | இருதயபுரம் பகுதியில் 3 இன்ஞ்ச் குடிநீர் விநியோக குழாய் அமைத்தல் | 3.35 | எம். கென்னடி | மதிப்பீட்டினை விட 0.01 விழுக்காடு குறைவு |

அலுவலக குறிப்பு. மேற்சொன்ன பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 478, நாள். 10.09.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

27) கொடைக்கானல் நகராட்சி குடிநீர் பணிக்கு தேவையான பிளிச்சிங் பவுடர் சப்ளை செய்வதற்கு 10.092018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | குடிநீர் பணிக்கு தேவையான பிளிச்சிங் பவுடர் சப்ளை செய்தல் | 2.01 | லட்சுமி எண்டர்பிரைசஸ் கோயம்புத்தூர் | மதிப்பீட்டு விகிதம் |
| | | | சரண்யா ஏஜென்சி சென்னை | 1.47 விழுக்காடு அதிகம் |

அலுவலக குறிப்பு. மேற்சொன்ன பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளில் மதிப்பீடு விகிதத்திற்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள லட்சுமி எண்டர்பிரைசஸ், கோயம்புத்தூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 479, நாள். 10.09.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

ஒம்/—ரா.முருகேசன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/
ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.